பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 14 சனிக்கிழமை 28.06.2024 | அதிர்வு 329

## பலாலி அம்மனை வழிபட இராணுவம் மீண்டும் தடை



(விரிவான செய்தி 5 ஆம் பக்கம்)

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# காணிக் கபளீகர அறிவிப்பு வாபஸ்

## வர்த்தமானி நள்ளிரவில் வந்தது அதிலும் பொடி வைத்தது அரசு

(ந.லோகதயாளன்)

வடமராட்சிக் கிழக்கு, பச்சிலைப்பள்ளி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் எண்ணத்தில் தேசிய மக்கள் சக்தி அரசு மூன்று மாதங்களுக்கு முன்னர் விடுத்த வர்த்தமானி அறிவித்தலை நேற்று நள்ளிரவு கடைசி நேரத்தில் அது வாபஸ் பெற்றிருக்கின்றது.

முன்னைய வர்த்தமானி அறிவித்தலை விலக்கும் புதிய வர்த்தமானி பிரகடனத்தில் கூட அரசு பொடி வைத்துத்தான் அதனைச் 04



III කොටස - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය - 2025.06.27
PART III – GAZETTE OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA – 27.06.2025 239

**Land Title Settlement Department**

Land Settlement Ordinance

**Cancellation of the Land Settlement Notice bearing No.2430 dated 28 March 2025**

Seven (07) preliminary Settlement Notices under Section 4 of the Land Settlement Ordinance No.20 of 1931, have been published in the *Gazette* No.2430 of 28th March, 2025. The following said seven (07) Notices are hereby cancelled on the policy decision taken by the government by considering the specific issues existing in the aforesaid mapped area and in order to facilitate an adequate opportunity for the local and foreign claimants.

| *District* | *Divisional Secretary's Division* | *Block Survey Village Plan.* | *Village* | *Settlement Notice No.* |
|---|---|---|---|---|
| Jaffna | Wadamaradchchi East (Maruthankerni) | 78 | Periyapachchilayippali | 5617 |
| Jaffna | Wadamaradchchi East (Maruthankerni) | 79 | Mulliyan | 5618 |
| Kilinochchi | Pachchilaipali | 77 | Kotandarakulam | 5619 |
| Mullativu | Maritime Pattu | 96 | Ampalawanpokkanei (a part) | 5620 |
| Mullativu | Maritime Pattu | 97 | Walayanmadam (a Part) | 5621 |
| Mullativu | Maritime Pattu | 98 | Karaiyyamulliwaikkal | 5622 |
| Mannar | Musali | 135 | 4th Mile Post (New) A part | 5623 |

At Land Title Settlement Department, Battaramulla on 25th of June 2025.

SUVINDA S SINGAPPULI,
Assistant Settlement Officer.

# வர்த்தமானி விலக்கப்பட்டமை குறித்து சுமந்திரன் திருப்தியும் அதிருப்தியும்!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகளைச் சுவீகரிப்பதற்கு வசதியாக அரசு விடுத்த வர்த்தமானி அறிவித்தலை இப்போது அது வாபஸ் பெற்றிருக்கின்றமை குறித்து திருப்தி தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், அதேசமயம் முன்னைய வர்த்தமானி அறிவித்தலை விலக்கும் புதிய அறிவித்தலின் வாசகங்கள் குறித்து கடும் அதிருப்தி தெரிவித்திருக்கின்றார்.

"அரசின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நாங்கள் உயர்நீதிமன்றத்தில் மேற்கொண்ட சட்டப் போராட்டமே கடைசி நேரத்தில் இவ்வாறு முன்னைய வர்த்தமானியை விலக்கும் நெருக்கடி நிலைக்குள் அரசை தள்ளியது என்பது வெளிப்படையானது – தெளிவானது.

எது, எப்படியாயினும் முன்னைய வர்த்தமானி அறிவித் 04





# வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலுக்குச் சென்று காணாமல்போன மீனவர் இன்று சடலமாக மீட்பு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு – மணற்காட்டில் கடற்றொழிலுக்குச் சென்று காணாமல்போன மீனவர் இன்று சனிக்கிழமை காலை சடலமாகக் கரையொதுங்கியுள்ளார்.

மணற்காட்டைச் சேர்ந்த அந்தோனி முத்து ஞானதாஸ் (வயது 37) என்ற இளம் குடும்பஸ்தரே சடலமாகக் கரையொதுங்கியுள்ளார்.

மேற்படி மீனவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றுள்ளார்.

கடலுக்குச் சென்ற மீனவர் வழமையாக காலை 9 மணியளவில் கரை திரும்பி விடுவார். ஆனால், அன்றைய தினம் அவர் கரை திரும்பாததால், சக மீனவர்கள் அவரைத் தேடி கடலுக்குச் சென்ற வேளையில், அவரது கட்டுமரம் மாத்திரம் கடலில் மிதந்த வண்ணம் காணப்பட்டுள்ளது.

அதனை மீட்டு மீண்டும் கரை சேர்த்த மீனவர்கள் காணாமல்போன மீனவரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் இன்று காலை அவரது சடலம் கரையொதுங்கியுள்ளது.

இந்த மரணம் ஒரு கொலைச் சம்பவமாக இருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை பதில் நீதிவான் முத்துக்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். தடயவியல் பொலிஸாரும் தடயங்களைப் பெற்றனர்.

பதில் நீதிவானின் உத்தரவுக்கமைய சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக



ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாரப்பன கடமைகளைப் பொறுப்பேற்பு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாரப்பன இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிய காளிங்க ஜெயசிங்க கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய இடத்துக்குக் கொழும்பில் பணியாற்றி வந்த மாரப்பன அண்மையில் நியமிக்கப்பட்டார்.

அவர் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.




### சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் உள்ளிட்ட

# மூவர் படகு வழியாக தமிழகத்தில் தஞ்சம்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இன்று அதிகாலை படகு மூலம் சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னார், பேசாலையில் இருந்து படகு மூலம் மூன்று நபர்கள் இந்தியாவின் மணல் தீடையில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று தமிழகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்துத் தமிழகப் பொலிஸார் மூன்று நபர்களையும் மீட்டு விசாரணை நடத்தினர்.

இதன்போது ஒருவர் முல்லைத்தீவு மாவட்டம், உடையார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் எனவும், ஏனைய இருவரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் எனவும் கண்டறியப் பட்டுள்ளது.இவர்கள் இலங்கையில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டதான தகவலையடுத்துத் தமிழகப் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.



# வாடகை வீட்டில் தங்கியிருந்த 30 வயது பெண் சடலமாக மீட்பு!

வீடு ஒன்றில் இருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெலென்னவத்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த பெண்ணே நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்று பிலியந்தலைப் பொலிஸார் குறிப்பிட்டனர். சடலமானது களுபோவில வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இந்தியாவில் இருந்து படகில் கடத்தி வரப்பட்ட 250 கிலோ கேரள கஞ்சாவுடன் மூவர் சிக்கினர்

**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்ட 250 கிலோகிராம் கேரள கஞ்சா யாழ். காரைநகர் பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கேரள கஞ்சா கடத்தி வரப்படுவதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் பெயரில் சந்தேகத்துக்கிடமான படகைக் கடற்படையினர் மறித்து சோதனையிட்டனர். இதன்போதே அந்தப் படகில் இருந்து 250 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்துப் படகில் இருந்த மூவரையும் படகுடன் கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் படகையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் படகுடன் சந்தேகநபர்கள் மூவரும் சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## காணிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருக்கின்றது.

'முன்னைய வர்த்தமானி அறிவித்தல் அரசின் கொள்கை முடிவுக்கு அமைய இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது' என்று புதிய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அரசு 'மேற்படி காணிகள் உள்ள பகுதிகளில் நிலவும் குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும் இந்தக் காணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிமை கோருபவர்களுக்கு போதுமான வாய்ப்பை வழங்குவதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது' என்றும் தெரிவித்துள்ளது.

அதன் அர்த்தம், இந்த விடயத்தை இப்போதைக்கு இரத்துச் செய்கின்றோம், தேவைப்பட்டால் போதிய வாய்ப்பை வழங்கி காணி கபளீகர நடவடிக்கையை புதிய அறிவித்தல் மூலம் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம் என்பதுதான் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மூல - முதல் - வர்த்தமானி அறிவித்தல் மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன்படி மூன்று மாத காலத்தில் - இன்று ஜுன் 28ஆம் திகதி - மேற்படி காணிகளில் சான்றாதாரங்கள் மூலம் உரிமைகள் நிலைநாட்டப்படாதவற்றைச் சுவீகரிக்கும் அதிகாரம் அரசுக்கு வந்துவிடும் என்ற நிலைமையில் நேற்றுக் கடைசி நேரத்தில் அந்த வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக உயர் நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியிருந்தது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த வழக்கின் மீது இந்த உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

அந்தப் பின்புலத்திலேயே இப்போது மூல வர்த்தமானியைக் கைவாங்கும் புதிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவில் வெளியாகியுள்ளது.

ஆனால் புதிய அறிவித்தலின் பிரகாரம் இந்தக் காணிகளுக்கு உரிமை கோரக் கூடியவர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்கி அதன் பின்னர் காணி சுவீகரிப்பு எந்தச் சமயத்திலும் முன்னெடுக்கப்படலாம் என்ற விவரம் உள்ளடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## வர்த்தமானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலை அரசு உத்தியோகபூர்வமாக வாபஸ் பெற்றுக்கொண்டமை திருப்தி தருகின்றது. அதனை வரவேற்கின்றோம். ஆயினும் அந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தலில், காணிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிமை கோருபவர்களுக்குப் போதுமான வாய்ப்பை வழங்குவதற்காக இந்த வர்த்தமானி விலக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்படும் வாசகம் அரசின் அடுத்த கட்ட உள்நோக்கம் குறித்து பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. போதுமான வாய்ப்பை அளிக்கின்றோம் என்ற பெயரோடு மீண்டும் இந்தக் காணி சுவீகரிப்பு நடவடிக்கை புதிய வடிவத்திக் நடைமுறைக்கு வராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆகையால் இந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக நாம் அதிருப்தியும் கொண்டுள்ளோம். அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்." - என்றார்.





# பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மனை வழிபட இராணுவத்தினர் மீண்டும் தடை

## முட்கம்பி வேலிக்கு முன்பாக கற்பூரம் கொளுத்தி வழிபட்ட மக்கள்

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

யாழ். பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு 35 வருடங்களின் பின்னர், கட்டுப்பாடுகள் இன்றி வழிபட நேற்று வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் அனுமதித்திருந்த நிலையில் இன்று சனிக்கிழமை மீள ஆலயத்துக்குச் செல்ல அனுமதி மறுத்துள்ளனர்.

உள்நாட்டுப் போர் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ஆம் திகதி பலாலியில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டது.

கடந்த 35 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயத்துக்குக் கடந்த 6 மாத காலத்துக்கு முதலே சுதந்திரமாகச் சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்து இருந்த போதிலும் , இதுவரை காலமும் கடுமையான கட்டுப்பாடுகளுடன், விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்துக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலயத்துக்கு மாத்திரம் செல்வதற்கு என உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பிரத்தியேக பாதை அமைக்கப்பட்டு, குறித்த பாதை ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை முதல் மக்கள் ஆலயத்துக்கு மாத்திரம் சென்று வழிபட்டுத் திரும்ப இராணுவத்தினர் அனுமதி வழங்கி இருந்தனர்.

ஆனால், இன்று சனிக்கிழமை ஆலயத்துக்குச் செல்லும் பிரத்தியேக பாதையை இராணுவத்தினர் மூடி முட்கம்பி வேலி அமைத்திருந்ததுடன், இரண்டு இராணுவத்தினர் கடமையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆலயத்துக்கு இன்று வழிபடச் சென்ற மக்கள், இராணுவத்தினர் ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்காததால் முட்கம்பி முன்பாக தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்திப் பூப்போட்டு வழிபட்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆபத்து நீடிக்கிறது!

வடமராட்சிக் கிழக்கு, பச்சிலைப் பள்ளி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள 5,941 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் தீய எண்ணத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விடுத்த வர்த்தமானி அறிவித்தலை நேற்று நள்ளிரவு கடைசி நேரத்தில் அது கைவாங்கியிருக்கின்றது.

முன்னைய வர்த்தமானி அறிவித்தலை விலக்கும் புதிய வர்த்தமானி பிரகடனத்தில் கூட அரசு தன்னுடைய குசும்புப் புத்தியைக் காட்டாமல் இல்லை. பொடி வைத்துத்தான் அந்த விலக்கு அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

'முன்னைய வர்த்தமானி அறிவித்தல் அரசாங்கத்தின் கொள்கை முடிவுக்கு அமைய இத்தால் ரத்து செய்யப்படுகின்றது' என்று புதிய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அரசு 'மேற்படி காணிகள் உள்ள பகுதிகளில் நிலவும் குறிப்பிட்ட பிரச்சினைகளை கருத்தில் கொண்டும் இந்தக் காணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிமை கோருபவர்களுக்கு போதுமான வாய்ப்பை வழங்குவதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது' என்றும் தெரிவித்துள்ளது.

அதன் அர்த்தம், இந்த விடயத்தை இப்போதைக்கு ரத்து செய்கின்றோம், தேவைப்பட்டால் போதிய வாய்ப்பை வழங்கி காணி கபளீகர நடவடிக்கையை புதிய அறிவித்தல் மூலம் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம் என்பதுதான்.

ஏறத்தாழ 94 வருடங்களுக்கு முந்திய ஒரு பழங்கால - குப்பையில் தூக்கிக் கடாச வேண்டிய - சட்டத்தின் கீழ்தான் இந்தக் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆரம்பத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில் அதனைச் சுட்டிக்காட்டி இருந்தார்.

காணிகளுக்கு உறுதி வழங்கும் நடைமுறை பிரிட்டிஷாரின் காலத்தில் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, ஓரளவுக்கு அந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள காணிகளை நிர்ணயிப்பதற்காக 1931 இல் கொண்டுவரப்பட்டதுதான் காணி நிர்ணயச் சட்டமாகும். அதனை எப்போதோ முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இப்போது 94 ஆண்டுகள் கழித்து அதே சட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளைச் சுவீகரிக்க முனைவது எதேச்சாதிகார நடவடிக்கையாகும்.

அதுவும், இவ்விடயத்தில் தமிழர் தரப்பு உயர் நீதிமன்றத்திடம் முறையிட்டு, உயர் நீதிமன்றம் மூலம் நேற்று முற்பகல் இடைக்காலத் தடை உத்தரவு பெறப்பட்ட பின்னரே, இந்த வர்த்தமானியை வாபஸ் பெறும் புதிய அறிவித்தல் அவசர அவசரமாக வெளியிடப்பட்டிருக்கின்றது என்பது தெளிவு. இந்த புதிய அறிவிப்பு அவசரமாக செய்யப்பட்டது என்பதினால் தான் நேற்று நள்ளிரவு வரையில் அதன் ஆங்கில மொழி மூலப் பிரதி மாத்திரமே வெளியாகி இருந்தது. இன்று நண்பகல் வரை தமிழ், சிங்களப் பிரதிகள் வெளிவரவில்லை.

நேற்று உயர் நீதிமன்றம் கடைசி நேரத்தில், மேற்படி மூல வர்த்தமானி அறிவித்தல் படி சம்பந்தப்பட்ட காணிகளை சுவீகரிக்கும் அதிகாரம் அரசுக்கு வர இருப்பதற்கு 12 மணி நேரத்திற்கு முன்னர், இடைக்கால தடை உத்தரவை விடுத்ததால்தான் நிலைமையைச் சமாளிக்க, அந்த மூல வர்த்தமானியைக் கை வாங்கும் அறிவித்தலை அவசர அவசரமாக அரசு நேற்று நள்ளிரவு விடுத்து இருக்கிறது.

எது, எப்படியாயினும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. அது கமா அடையாளம் போட்டு, தள்ளி வைக்கப்பட்டு இருக்கிறது. அவ்வளவே.

மீண்டும் எந்த சமயத்திலும் இந்தக் காணிக் கபளீகர வர்த்தமானி அறிவித்தல் புது உருவில் வரலாம் என்பதுதான் ஆபத்தாகத் தொடரும் நிலைமையாகும்.

# இருவேறு இடங்களில் மீன்பிடிப் படகுகள் விபத்து! மாயமானவர்களைத் தேடும் நடவடிக்கை தீவிரம்!!



இலங்கையின் கடற்பரப்பில் இன்று சனிக்கிழமை காலை இரண்டு படகு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று தகவல்கள் கிடைத்துள்ள நிலையில், விபத்துக்களின் விளைவாக மீனவர்கள் பலர் காணாமல்போயுள்ளனர் எனவும், அவர்களைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு இந்தச் சம்பவங்கள் குறித்து தீவிர கவனம் செலுத்தி வருகின்றது என்றும், காணாமல்போன மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், தொடர்புடைய நிவாரணங்களை வழங்குவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் மீன்பிடிச் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக உறுதியுடன் இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளது.

இத்தகைய விபத்துக்களைக் குறைப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹாவத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

**தேவேந்திரமுனை விபத்து**

மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திர முனை துறைமுகத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்ற எம்.டி.ஆர் 263 தினேஷ் 4 என்ற பல நாள் மீன்பிடிப் படகு, ஒரு வர்த்தகக் கப்பலுடன் மோதியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தப் படகில் ஐந்து மீனவர்கள் இருந்தனர். படகின் மேல் பகுதியில் இருந்த ஒரு மீனவர் மீட்கப்பட்டு, சிகிச்சைகளுக்காக இலங்கைக் கடற்படையினரால் கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்.

மற்ற நான்கு பேரையும் தேடும் நடவடிக்கையில் இலங்கைக் கடற்படையினர் இன்று காலை 7:30 மணி முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் கரையில் இருந்து சுமார் 20 கடல் மைல்கள் தொலைவில் வர்த்தகக் கப்பல்கள் செல்லும் பாதையில் நிகழ்ந்துள்ளது.

மீன்பிடிப் படகின் கீழ்ப் பகுதியில் ஏனைய மீனவர்கள் இருக்கின்றார்களா என்ற சந்தேகத்தின் பேரில், இலங்கைக் கடற்படையினர் சுழியோடிகளுடன் இணைந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மற்ற மீனவர்களைத் தேடும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹாவத்த உறுதிப்படுத்தினார்.

**பேருவளை விபத்து**

களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, மொரகல்லை பிரதேசத்தில் இன்று காலை இரண்டு மீனவர்கள் சென்ற ஒரு நாள் படகு விபத்துக்குள்ளானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் இல்லாமல் படகு கடலில் காணப்பட்டது. அது தற்போது கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. காணாமல் போன இரண்டு மீனவர்களையும் தேடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தச் சம்பவம் கரையிலிருந்து மிக அருகில் நிகழ்ந்துள்ளது.

மீனவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றாலும், இரண்டு மீனவர்கள் இந்தப் படகில் சென்றது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மீனவர்களையும் கண்டுபிடிப்பதற்கான முழு முயற்சியும் எடுக்கப்பட்டு வருகின்றது என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் தீயணைப்பு பிரிவுகளை நிறுவுக!

## அமைச்சர்களான சந்தன அபேரத்ன, விமல் ரத்நாயக்க ஆகியோரிடம் ரவிகரன் எம்.பி. கோரிக்கைக் கடிதம் கையளிப்பு




**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவை உடனடியாக நிறுவ நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்க ஆகியோரிடம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கைக் கடிதம் கையளித்துள்ளார்.

கடந்த 17.06.2025 அன்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில், முல்லைத்தீவு மற்றும், மன்னார் மாவட்டங்களில் தீயணைப்புப் பிரிவை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் உரை நிகழ்த்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவை நிறுவ உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களான சந்தன அபேரத்ன, விமல் ரத்நாயக்க ஆகியோரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கைக் கடிதங்களைக் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மாற்றுத் திறனாளிகளான மாணவர்களை கல்வியில் உள்ளீர்ப்புச் செய்ய கருத்தாய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

முஸ்லிம் எய்ட் ஸ்ரீ லங்கா நிறுவனம் மற்றும் உள்ளீர்ப்பு கல்வி அபிவிருத்திக்கான போரம் இணைந்து ஏற்பாடு செய்த ‘விசேட தேவையுடைய மாணவர்கள் உள்ளீர்ப்புச் கல்வி அபிவிருத்தி’ என்னும் தலைப்பிலான கருத்தாய்வு திருகோணமலை உப்புவெளி லக்கி பீச் ரிசோர்ட்டில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் மிகவும் குறைந்த செயற்றிறனுடையது என்று அடையாளங்காணப்பட்ட கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளதும் அங்கு கற்கும் மாணவர்களதும் அடைவு மட்டம் மற்றும் செயற்றிறன்களை மேம்படுத்தும் நோக்குடன் முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவத்தால் வரையப்பட்டு, முஸ்லிம் எய்ட் யூகே நிதியாதாரம் வழங்கப்பட்டு கடந்த நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமூக பங்கேற்பை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்ட மாதிரியானது விசேட தேவையுடைய சிறார்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் கவனத்தைக் குவித்திருந்தது.

இந்தக் கருத்திட்டத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக விசேட தேவையுடைய சிறார்களைக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளில் உள்ளீர்ப்புச் செய்தல் தொடர்பான பெறுபேறுகளைக் கல்விக் கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அரசாங்கத் தரப்பினரிடம் எடுத்துச் செல்வது என்பது இக் கருத்தாய்வில் குறிக்கோளாக அமைகின்றது.

அந்தவகையில், இந்தக் கருத்தாய்வின் முடிவில் பங்கேற்றவர்களால் பல்வேறு உடன்பாடுகள் எட்டப்பட்டன.

1. சர்வதேச நியமமான அனைவருக்கும் கல்வி என்ற கருத்தாக்கத்தை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டவர்களாக,

2. வேகமாக மாறிவரும் இன்றைய உலகின் பல்வேறு சவால்களுக்கு பொதுவில் இளம் தலைமுறையினரும், குறிப்பாக மாற்றுத் திறனாளிகளாக அடையாளம் காணப்பட்ட மாணவ சமூகமும் தம்மைத் தகவமைத்துக் கொள்வதற்கு அவசியமான வாய்ப்புகள், வளங்கள், வழிகாட்டல்கள் வினைத்திறனுடன் வழங்கப்படல் வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டவர்களாக,

3. அனைவரும் கல்வி வாய்ப்புக் கிடைக்க வேண்டும் எனின், அரசு, சுயாதீனமான மனித நேய அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகிய மூன்று பிரிவினரும் இணைந்து பரஸ்பரம் ஒத்துழைப்புடனும் பங்காளித்துவ முறைமையின் கீழ் செயற்படுவது இந்த இலக்கை அடைவதைத் துரிதப்படுத்தும் என்பதை முழு மனதுடன் ஏற்றுக் கொண்வர்களாக,

4. நடப்பிலுள்ள அரசாங்கத்தின் கல்விக் கொள்கை மற்றும் வழிகாட்டல்களுக்கு உட்பட்டு செயற்படுவதுடன், மேற்படி கல்விக் கொள்கைகளுக்கு நடைமுறையில் வலுவூட்டல் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொண்டவர்களாக,

அரச மற்றும் சிவில் சமூக முயற்சிகளால் அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகள், சவால்கள் மற்றும் இடைவெளிகளை இந்தக் கருத்தாய்வில் பங்கேற்ற அனைவரும் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்துவது என்று உடன்பாடு எட்டப்பட்டது.

இந்தக் கருத்தாய்வின் மூலம் அடையப்பெற்ற தெளிவுகள் சமூக மயப்படுத்தப்படல் வேண்டும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன், அரச அதிபரின் பிரதிநிதிகள், சுகாதாரத்துறை மற்றும் சமூக சேவைகள் துறை அதிதிகளுடன் திருகோணமலை மாவட்ட பிரதேச செயலர்கள் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.





# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தில் போதை ஒழிப்புக் கலந்துரையாடல்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் ஊடாகக் கற்பிட்டி புதுக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விஷேட கலந்துரையாடல் ஒன்று தேசிய மக்கள் சக்தியின் புதுக்குடியிருப்பு வட்டார அமைப்பாளர் மஜீத் கான் தலைமையில் வியாழக்கிழமை (26) இடம்பெற்றது.





இந்தக் கலந்துரையாடலில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரன்வலராச்சி, பொலிஸ் அதிகாரிகளான கே.சஞ்ஜீவ, ஜே.எம் ஜயகொடி, கற்பிட்டி பிரதேச சபையின் உப தவிசாளர் சமன் குமார ஹேரத், கிராம உத்தியோகத்தர் எம்.றியால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரன்வலராச்சி,

தற்போதைய நிலையில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நீண்டதொரு இடைவெளி காணப்படுகின்றது. இதற்கு காரணம் சில பொலிஸ் அதிகாரிகள் குற்றம் புரியும் நபர்களுடன் கொண்டுள்ள நட்புறவு ஆகும். இந்த நிலை கற்பிட்டி பொலிஸ் நிலையத்திலும் காணப்படுகின்றது.

நான் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஆறு வருடங்களுக்கு முன் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் போது இருந்த கற்பிட்டி தற்போது இல்லை. தற்போது பாரிய வளர்ச்சி அடைந்துள்ள. பொருளாதார முன்னேற்றம் காணப்படுகின்றது.

நான் புதிதாக கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக மீண்டும் கடமை ஏற்று ஒரு மாத காலம் மட்டுமே சென்றுள்ளது. கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள சகல சட்டவிரோத குற்றச் செயல்களையும் தடுத்து நிறுத்தி புதியதோர் கற்பிட்டி பிரதேசத்தை கட்டி எழுப்புவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

அதன் நிமித்தம் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தனித்தனியாக மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி அந்தப் பகுதிகளில் காணப்படும் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை உள்ள இடங்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் சட்டவிரோத செயல்களையும் முற்றாக இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றேன். அதற்கான பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியமாக காணப்படுகின்றது.- என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களும் தமது பூரண ஒத்துழைப்புக்களையும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு வழங்குவர் என்று தெரிவித்தனர்.





# மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு மகஜர்!

**நில உரிமைகள், பொருளாதார சுதந்திரம் மற்றும் நிர்வாக பாகுபாடு குறித்து அதில் விவரிப்பு**

**(க.கிஷாந்தன்)**

மலையகத் தமிழ் மக்களின் நீண்ட கால உரிமைகள், நிலமின்மை, பொருளாதார சார்பு மற்றும் நிர்வாக புறக்கணிப்பு போன்ற அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையரிடம் நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க்கை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் சந்தித்து, மலையகத் தமிழர் சமூகத்தின் வரலாற்று பாரபட்சங்கள் மற்றும் தொடரும் சமூக, பொருளாதார புறக்கணிப்புகளை வலியுறுத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக, ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ் முற்போக்கு கூட்டணியின சார்பில், அதன் சர்வதேச விவகாரங்களுக்கான உப தலைவர் பாரத் அருள்சாமி , உயர் ஆணையரை அவரது அதிகார பூர்வ கலந்துரையாடலில் நேரில் சந்தித்து, ஒரு விரிவான உரிமைகள் அடிப்படையிலான அறிக்கையை கையளிததார்.

இந்த அறிக்கை மலையக மக்களின் நில உரிமை, அடிப்படை வசதிகள், சுகாதார அணுகல், நிர்வாக பாகுபாடு மற்றும் சீர்திருத்த தேவைகளை வலியுறுத்துகிறது.

அந்த அறிக்கையில், நிலமின்மை மற்றும் உறையுளுக்கான அனுமதி மறுப்புக் குடியிருப்புகள், தலைமுறை தலைமுறையாகச் செயற்பட்டும் நில உரிமை மறுக்கப்படுகிறது தொடர்பிலும்,

பொருளாதார சுதந்திரமின்மை – தொழிலாளர்கள் சார்பு ஊதியத்தில் சிக்கி மேலோங்க முடியாமல் இருக்கின்றமை தொடர்பிலும்,

தோட்ட மருத்துவ மையங்கள் அரசின் பேணல் இல்லாமையால் செயலிழந்துள்ளமை, தொழிலாளர் நல தரங்களை மீறுகின்றமை போன்றன பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

நிர்வாக பாகுபாட்டில் ஒரு கிராம சேவகர் 3 ஆயிரம் பேருக்கு மேல் பொறுப்பேற்கும் சூழல் காணப்படுகின்றமை தொடர்பிலும் விளக்கப்பட்டுள்ளது.

அறிக்கை வழங்கிய பின்னர் பேசிய பரத் அருள்சாமி தெரிவிக்கையில், நமது மக்கள் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திவிட்டனர். ஆனால் அவர்கள் இன்னமும் நிலமற்றவர்களாகவும், நிர்வாக புறக்கணிப்புக்குள்ளாகவும் இருக்கின்றனர். இது வளர்ச்சி பற்றிய விவாதம் அல்ல. இது திட்டமிட்ட ஒடுக்குமுறையைப் பற்றிய மனித உரிமை விவாதம்.– என்றார்.






# காரைதீவு பிரதேச சபை புதிய தவிசாளர் சம்பிரதாயபூர்வமாக கடமைகளை ஏற்பு

**(நூருல் ஹுதா உமர்)**

காரைதீவு சபை புதிய தவிசாளர் சுப்பிரமணியம் பாஸ்கரன் மற்றும் புதிய உப தவிசாளர் முஹமட் ஹனிபா முஹமட் இஸ்மாயில் ஆகியோரின் பதவியேற்பு வைபவம் காரைதீவு பிரதேச சபையில் நேற்று (27) பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான முன்னாள் தவிசாளர் வை.கோபிநாந்த், என்.எம். றணீஸ், முன்னாள் உப தவிசாளர் ஏ.எம்.ஜாஹீர், ஏ.ஆர்.எம். ஹில்மி, ஏ.பர்ஹாம், பிரதேச சபை செயலாளர் உட்பட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு வைபவம் முடிவுற்றதும் தவிசாளர் அறையில் கலந்துரையாடலும் இடம்பெற்றது.





# சிறுவர்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது 2024 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 80 பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை மீளாய்வு செய்து அதற்கான தரங்களை இட்டிருந்தது.

அந்தவகையில் மண்முனை தென் எருவில்பற்று, போரதீவுப்பற்று, மண் முனைப்பற்று மற்றும் மண்முனை தென்மேற்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து பங்கேற்றிருந்த பாடசாலைகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமையில் இடம் பெற்றது.

சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி அஜந்தா தவசீலனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் உளநல வைத்திய நிபுணர் மருத்துவர் கமல்ராஜ்ஜால் பாடசாலைகளில் இடம்பெறுகின்ற உளநலம் சார் பிரச்சினைகளும், சவால்களும் மற்றும் அவற்றை எவ்வாறு தீர்த்துக்கொள்வது தொடர்பாகக் கருத்துரை வழங்கினர்.

அத்தோடு மாவட்ட உத்தியோகத்தர்களால் கலந்து கொண்டோருக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான மேலதிக விளக்கங்களும், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

எதிர்காலங்களில் பாடசாலைகளுடன் நெருக்கமாக செயற்பட்டு, பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் இணைந்து, பாடசாலைகள் செயற்படவேண்டும் என்ற கோரிக்கை பிரதேச செயலாளரால் முன்வைக்கப்பட்டது. கலந்து கொண்ட பாடசாலைகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்கள் சார்ந்து வலயக்கல்வி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.



# மின்சாரம் தாக்கி 8 வயது சிறுமி பலி

சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கிலிகந்தராவ பகுதியிலுள்ள வீடு ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மின்சாரம் தாக்கியதையடுத்து மேற்படி சிறுமி மதவாச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 8 வயது சிறுமியே உயிரிழந்துள்ளார் என்று மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுமி தண்ணீரைச் சூடாக்கும் மின்சாரக் கருவியைப் பயன்படுத்தியபோது மின்சாரம் தாக்கியுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30 ஆண்டு நிறைவில் புதிய இலச்சினை

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவால் 30 ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தை குறிக்கும் புதிய இலச்சினை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய இலச்சினையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ. எல்.எஸ். ஹிதாயா, திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜஃபர், அபிவிருத்தி உத்தியோத்தர்களான றிகாஸா ஷர்வின், எம்.ஐ.சர்பீன் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 30 ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தைக் குறிக்கும் புதிய இலச்சினை சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத்தின் சிந்தனையில் வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் ஆரம்பம்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்துக்கான கிரியாரம்பம் இன்று 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜுலை மாதம் 02 ஆம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஜுலை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை முதல் எண்ணைய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

மறுநாள் 02 ஆம் திகதி புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் காலை 9 மணியளவில் கிழக்கின் பிரபல சிவாச்சாரியார் சிவாச்சார்யதிலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெறும்.

ஆலய பூசகர் க.பாஸ்கரன் உதவியுடன் இடம்பெறும் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேக திருவிழா இடம்பெறும்.

ஜுலை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.





# திருகோணமலை மாவட்ட மீனவர்களது பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி.எம் ஹேமந்த குமார தலைமையில் இடம் பெற்ற குறித்த கூட்டத்தில்,

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே மற்றும் வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் கேமசந்திரா, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப், ரொசான் அக்மீமன மற்றும் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், மீனவ சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மீன் பிடி தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மீனவ சமூகம் பிரச்சினைகள் இன்றித் தங்களது தொழில்களை முன்னெடுத்து செல்வது உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது. சட்ட விரோத மீன்பிடி, திருகோணமலை பொது மீன் சந்தை, கொட்பே மீன் பிடி துறை முகம் போன்றவற்றில் நிலவும் குறைபாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.





# கதிர்காம யாத்திரை சென்றவர் வள்ளி மலையில் உயிரிழப்பு!

(உடப்பு க.மகாதேவன்)

உடப்பு ஆண்டிமுனை சின்னக் கொலனி வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினசாமி பொன்னம்பலம் என்பவர் கதிர்காமத்துக்குப் பாதயாத்திரையை மேற்கொண்ட நிலையில் கதிர்காமத் தலத்தில் நேற்று (27)உயிரிழந்துள்ளார் என்று அவரின் குடும்பத்தினர் குறிப்பிட் டுள்ளனர்.

உகந்தமலையில் இருந்து பாதயாத் திரையை மேற்கொண்டுள்ள நிலையில் நாட்டில் பல பகுதிகளில் இருந்து பலர் இந்த பாத யாத்திரையில் கலந்து கொண்டனர்.

இந்த யாத்திரிகர் பாதயாத்திரையை நிறைவு செய்த நிலையில் கதிர்காம வள்ளி மலைக்குச் சென்ற போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர் கடந்த காலத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று அவரின் குடும்பத்தினர் குறிப்பிட்டுள் ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் கதிர்காமம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.






# அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டதால் இந்திய மீனவர் கைதாகும் நிலை ஏற்பட்டது

## எஸ். ஜெய்சங்கர் தெரிவிப்பு

இந்தியாவில் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தையடுத்தே, இலங்கையால் இந்திய கடற்றொழிலாளர்கள் கைதுசெய்யப்படும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அந்த ஒப்பந்தத்தின்படி, இலங்கையின் சில கடல் பகுதிகளில் மீன்பிடி உரிமைகளை இந்தியா விட்டுக்கொடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேரம், நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படாமல், 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த முடிவின் விளைவுகள் இன்றும் தமிழ்



நாட்டில் உணரப்படுவதாக அவர் கூறினார்.

அவசரகால நிலை அமுலாக்கத்தின் 50 ஆவது ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, பாரதிய ஜனதா கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவசரகால நிலை இந்தியாவின் உலகளாவிய ஜனநாயக பிம்பத்தை எவ்வாறு சேதப்படுத்தியது என்பதையும், அந்தக் காலத்தின் தனிப்பட்ட அனுபவங்களையும் அவர் நினைவு கூர்ந்தார்.

தேசத்தை விட குடும்பத்திற்கு முன்னுரிமை அளிப்பது இதுபோன்ற சர்வாதிகார சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும் எனவும் அவர் எச்சரித்தார், அத்துடன், எதிர்காலத்தில் இவ்வாறான அவசர நிலைகளைத் தடுக்க வேண்டும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இந்தியாவினால் தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மையப்படுத்தியே, எஸ்.ஜெய்சங்கரினால் இந்த கருத்துகள் வெளியிடப்பட்டிருந்தன.

## எல்லை தாண்டிய பயங்கரவாதம்:

# இந்திய நிலைப்பாட்டை சீனாவிடம் மீண்டும் வலியுறுத்தினார் ராஜ்நாத் சிங்

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் அட்மிரல் டான் ஜுனுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிபட தெரிவித்துள்ளார்.

சீனாவின் கிங்டாவோவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டின் ஒரு பகுதியாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், சீன பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் டான் ஜுன் உடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில், ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கை தொடரும் என்று ராஜ்நாத் சிங் தெரிவித்தார். மேலும், இந்தியாவின் இந்த அசைக்க



முடியாத உறுதியை அண்டை நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதோடு, சீனா உடனான உறவில் புதிய சிக்கல்கள் ஏற்படுவதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். இது தொடர்பாக ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “கிங்டாவோவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக சீன பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் டான் ஜுனுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். இருதரப்பு உறவுகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆக்கபூர்வமான மற்றும் எதிர்காலத்திற்கான கருத்துப் பரிமாற்றம் நடந்தது.

கிட்டத்தட்ட ஆறு வருட இடைவெளிக்குப் பிறகு கைலாஷ் மானசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டதில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேர்மறையான உத்வேகத்தைப் பேணுவதும், இருதரப்பு உறவில் புதிய சிக்கல்களைச் சேர்ப்பதைத் தவிர்ப்பதும் இரு தரப்பினரின் கடமையாகும்.” என்று தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில், கிழக்கு லடாக் இராணுவ மோதல் மற்றும் கொடிய கல்வான் பள்ளத்தாக்கு மோதலைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் கடுமையான பாதிப்பை சந்தித்தன.

# நடிகர் கிருஷ்ணா பிணை கோரி மனு

போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகர் கிருஷ்ணாவுக்கு பிணை வழங்குமாறு கோரி நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போதைப் பொருள் பயன்படுத்தியதாக நடிகர் ஸ்ரீகாந்த், ஏற்கனவே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இது சினிமா வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனிடையே, போதைப்பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் கிருஷ்ணாவும் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டார். இதனையடுத்து அவருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டதோடு அவர், நீதிமன்றத்திலும் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை ஜுலை மாதம் 10ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், நடிகர் கிருஷ்ணாவுக்கு பிணை வழங்குமாறு கோரி சிறப்பு நீதிமன்றில் நேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்கா ஈரானுடன் இரகசிய பேச்சுவார்த்தை

ஈரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு விரும்பும் அமெரிக்கா, முதலீடு, முடக்கப்பட்ட நிதிகளை விடுவித்தல் உள்ளிட்ட ஆசையைத் தூண்டும் விடயங்களை முன்வைத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்தோடு, பொதுநலனுக்கான அணுசக்தி திட்டத்தில் பல பில்லியன் டொலர் முதலீடு உள்ளிட்டவையும் வாக்குறுதி அளித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் மற்றும் ஈரானுக்கும் இடையே சமீபத்திய இராணுவத் தாக்குதல்கள் இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்தநிலையில், வெளியான தகவல்களின் அடிப்படையில் அமெரிக்க அதிகாரிகளும் மத்திய கிழக்கு அமைச்சர்களும் இரகசியமாக ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.


அத்தோடு, ஈரான் ஒரு போதும் யுரேனியம் செறிவூட்டல் முன்னெடுக்கக் கூடாது என அமெரிக்கா தரப்பு கட்டாயப்படுத்தி வருகின்றது இருப்பினும், ஈரான் தொடர்ந்து மறுத்தும் வருகின்றது.

இந்த நிலையிலேயே 20 முதல் 30 பில்லியன் டொலர் வரையில் பொது நலனுக்கான அணுசக்தி திட்டத்தில் முதலீடு, தடைகளை நீக்குதல் மற்றும் வெளிநாடுகளில் முடக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து ஆறு பில்லியன் டொலர் வரையில் பயன்படுத்தும் அனுமதி உள்ளிட்டவையை அமெரிக்கா முன்வைத்துள்ளது.

இது மட்டுமின்றி, அமெரிக்கா சமீபத்தில் குண்டுவீசி சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்படும் ஃபோர்டோ அணுசக்தி தளத்தை மறுகட்டமைப்புக்கு உதவுவதாகவும் அமெரிக்கா வாக்குறுதி அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பாவில் வெப்பம் அதிகரிப்பு: பாரிஸ் நகரில் காலநிலை எச்சரிக்கை





ஐரோப்பிய நாடுகளில் இரண்டாவது வெப்ப அலை இந்த வார இறுதியில் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளதை அடுத்து நேற்று பிரான்ஸில் 21 பிராந்தியங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில், வெப்ப நிலை வடக்கு நோக்கி நகர்ந்து பிரான்ஸில் ஒரு வெப்பக் குவிமாடம் உருவாகும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் கடுமையான வெப்பத் தாக்கத்துடன் நேற்று முன்தினம் நாடு முழுவதும் இடி மின்னல் தாக்கம் மற்றும் கடும் காற்றுடன் பொழிந்த மழைக்கு இரண்டு பேர் பலியாகியிருந்தனர்.

பாரிஸ் நகரில் மட்டும் பல வீதிகளில் 500 முதல் 1,000 வரையான மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் புதிய வெப்ப அலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில், இந்த வார இறுதியில் இருந்து, தலைநகர் பாரிஸ் உட்பட்ட நகரங்களில் 30 பாகை செல்சியசுக்கு மேற்பட்ட வெப்பம் பரவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை போர்தோ ஓர்லியன்ஸ் நகரங்கள் மீண்டும் 40 பாகையை தாண்டும். பாரிஸ் நகரத்தில் வெப்பநிலை 38சி பாகையை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதேபோல இந்த ஆண்டின் இரண்டாவது வெப்ப அலை இந்த வார இறுதியில் பிரித்தானியாவில் பரவி அங்கும் பல இடங்களில் 30 பாகை செல்சியசுக்கும் அதிகமான வெப்ப நிலை உயரும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக இந்த வகையான வெப்ப அலை கோடைகாலத்தில் பிற்பகுதியில் வருவதே வழமையாக உள்ள நிலையில் தற்போது விதிவிலக்கான முறையில் ஜுன் மாதத்தில் இவ்வாறான வெப்ப அலைகள் உருவாகிவருவது குறிப்பிடத்தக்கது.

# ஈரானுடன் நடந்த போரில் இஸ்ரேலுக்கு 12 பில்லியன் டொலர் செலவில் சேதம்

ஈரானுடன் நடந்த 12 நாள் போரில் இஸ்ரேலுக்கு சுமார் 12 பில்லியன் டொலர் அளவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் – இஸ்ரேல் இடையேயான தாக்குதலில் இஸ்ரேலின் முக்கிய நகரங்கள் கடும் சேதமடைந்ததுடன் குறிப்பாக இஸ்ரேலின் வான் பாதுகாப்பை மீறி ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில், ஈரான் தாக்குதலில் இஸ்ரேலுக்கு சுமார் 12 பில்லியன் டொலர் மதிப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் வரித்துறை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் கூறுகையில், "நாடு தற்போது மிகப்பெரிய சவாலை சந்தித்து வருகிறது.

இஸ்ரேலின் வரலாற்றில் இது போன்ற சேதத்தை நாடு இதுவரை சந்தித்ததில்லை.

ஈரான் தாக்குதலில் சேதமடைந்த கட்டிடங்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் 12 பில்லியன் டொலர் மதிப்பில் சேதம் ஏற்பட்டுள்ளது." என்று அவர் தெரிவித்தார்.

எனினும் சேதமடைந்த இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பு மற்றும் ஆயுதங்களை கணக்கெடு சேத மதிப்பு கூடுதலாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

கனடா முரசு
பக்கங்கள் - 3
சனிக்கிழமை 28/06/2025

## கனடாவுடனான அனைத்து வர்த்தக பேச்சுகளும் நிறுத்தம்

**ட்ரம்ப் அறிவிப்பு**

கனடாவுடனான அனைத்து வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் உடன் நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் C2




# தமிழினப்படுகொலை தொடர்பில் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும்

**கனேடிய எம்.பி விஜய் தணிகாசலம் கோரிக்கை**

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் செம்மணி விஜயமானது தமிழினப்படுகொலை நிகழ்த்தப்பட்ட காலப்பகுதியில் பதிவான மிகமோசமான மீறல் சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற, சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டியதன் உடனடித் தேவைப்பாட்டைக் காண்பிப்பதாக ஒன்றாரியோ மாகாணப் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜய C2

# அமெரிக்க பொருள்களை புறக்கணிக்கும் கனேடியர்கள்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் கூடுதல் வரி விதிப்புகள், கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதாக மிரட்டல் ஆகிய விடயங்களால் அமெரிக்க பொருள்களை புறக்கணிக்க முடிவு செய்துள்ளார்கள் கனேடியர்கள்.

ஆனால், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள்களை வாங்க கனேடியர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால், அவற்றின் விலை அதிகமாகிக்கொண்டே செல்கிறது.

இருந்தாலும், விலை அதிகமானாலும் தங்கள் நாட்டிலேயே தயாராகும் பொருள்களை வாங்கும் ஆர்வம் மக்களிடையே அதிகமாகிவருகிறது.

சமீபத்திய ஆய்வொன்றில் பங்கேற்ற கனேடியர்களில் 63 சதவிகிதம் பேர், தங்கள் உணவு எங்கிருந்து வருகிறது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளும் பட்சத்தில், அவற்றிற்கு அதிக விலை கொடுக்கவும் தயார் என்று கூறியுள்ளார்கள்.




ஆக, மக்களுடைய விருப்பம் மற்றும் அவர்களுடைய வாங்கும் தன்மை ஆகிய இரண்டு விடயங்களுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக, சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் பங்கு முயற்சிகளில் இறங்க, உணவு உற்பத்தி செய்பவர்களோ, விலைகளைக் குறைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளார்கள்.





# டொரண்டோவில் பிரைட் பேரணி நிகழ்வில் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகக் கூடும்

டொரண்டோவில் நடைபெறவுள்ள பிரைட் பேரணி நிகழ்வில் களவுச் சம்பவங்கள் பதிவாகக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பிரைட் Pride வாராந்த நிகழ்வின் போது 300 இற்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டன என டொரண்டோ நகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு மீண்டும் அதே நிலைமை ஏற்படலாம் எனத் தீவிர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாற இறுதியில் திருடர்கள் மீண்டும் செயல்பட வாய்ப்பு அதிகம். அதுவே அவர்களின் முறைமை. அவர்கள் இவ்வாறான கூட்ட நெரிசலில் வாய்ப்புகளைத் தேடுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்களது உடமைகளை உடலுடன் நெருக்கமாக வைத்திருக்கவுமாறும், முன்பக்கம் பையில் வைத்துக்கொள்ளுமாறும், பத்திரமாக கவனத்துடன் இருக்கவும் அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் கனடாவில் செயல்படாத அலைபேசிகள் மற்ற கண்டங்களில் சரியாக வேலை செய்யும் எனவும் அந்தக் காரணத்தினாலே திருடர்கள் இவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள் எனவும் டிஜிட்டல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## தமிழினப்படுகொலை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றை மேற்கொண்டு கடந்த திங்கள் கிழமை இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், யாழ்ப்பாணத்திலுள்ள செம்மணி சித்துபாத்தியில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழியைச் சென்று பார்வையிட்டிருந்தார்.

செம்மணி மனிதப்புதைகுழியானது கடந்தகாலக் காயங்கள் மக்கள் மத்தியில் இன்னமும் ஆறாமல் இருப்பதை உணர்த்துவதாகவும், அம்மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச தடயவியல் நிபுணர்களின் பங்களிப்புடன் அகழ்வுப்பணிகள் மற்றும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் உயர்ஸ்தானிகர் வலியுறுத்ததியிருந்தார்.

அதேவேளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின்போது குழந்தை உட்பட 3 மனித சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் கனடாவின் ஒன்ராரியோ மாகாணப் நாடாளுமன் உறுப்பினர் விஜய் தணிகாசலம்,

ஒன்றாரியோ மாகாணப் நாடாளுமன்றத்தில் தமிழர்கள் செறிந்துவாழும் ஸ்காபரோ-ரக்பார்க் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் என்ற ரீதியில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான வலியுறுத்தலை தானும் மீளவலியுறுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு உயர்ஸ்தானிகரின் செம்மணி மனிதப்புதைகுழி விஜயமானது தமிழினப்படுகொலை நிகழ்த்தப்பட்ட காலப்பகுதியில் பதிவான மிகமோசமான மீறல் சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற, சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டியதன் உடனடித் தேவைப்பாட்டைக் காண்பிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





## கனடாவுடனா...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயத்தை தனது சமூக ஊடக பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கனடா, வியாபாரம் செய்ய மிகவும் கடினமான ஒரு நாடாக இருப்பதைத் தவிர, எங்கள் விவசாயிகளிடம் பல ஆண்டுகளாக பால் பொருட்கள் மீது 400 வீத வரி விதித்து வந்துள்ளது.

இப்போது அவர்கள் எங்கள் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களில் டிஜிட்டல் சேவைகள் வரியை விதிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது எங்கள் நாட்டின் மீது நேரடியானதும் மற்றும் வெளிப்படையானதுமான தாக்குதலாகும்.

தெளிவாக, அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை போல செயல்படுகிறார்கள் அந்த அமைப்பும் இதுபோலவே செய்துள்ளது.

அத்தோடு, அதையொரு விவாதமாக நாங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்த மிகைப்படுத்தப்பட்ட வரியை அடிப்படையாகக் கொண்டு, கனடாவுடன் உள்ள அனைத்து வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் உடனடியாக நிறுத்துகிறோம்.

வருகிற ஏழு நாட்களுக்குள் கனடா, அமெரிக்காவுடன் வியாபாரம் செய்ய வேண்டுமானால் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதனை அறிவிப்போம்."
என அவர் தெரிவித்துள்ளார்.





# கனடாவில் இலங்கையர்களை சந்தித்தார் பிரதமர் ஹறிணி

கனடாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரி, வென்கூவர் பகுதியில் உள்ள இலங்கையர்களை சந்தித்துள்ளார்.

அவர்களுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தமையால் மகிழ்ச்சி அடைவதாகவும் பிரதமர் ஹறிணி அமரசூரி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து நாம் எவ்வளவு தொலைவில் இருந்தபோதிலும், அவர்களின் அன்பான வரவேற்பு, உபசரிப்பு மற்றும் கருத்துப் பகிர்வு மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.















